1983 ஜனவரி 31]

(ஆ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவு), 1983.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1983-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகாரவரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

திரு, அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் தலைவர் அவர்களே, இதிலே சில முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 12 ஊராட்சிப் பகுதிகள் சென்னைக்கு அருகே உள்ள அந்தப் பகுதிகள் 1978-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னை நகரத்தோடு இணைக்கப்படுகின்றன. ஆகவே, சென்னை உயர்நீதிமன்ற அதிகாரத்தின் கீழ் அந்தப் பகுதிகள் சேர்க்கப்பட்டு, ஒரிஜினல் சிவில் ஜூரிஸ்டிக்ஷன், ஸ்மால் காசஸ் கோர்ட், சிட்டி சிவில் கோர்ட், மெட்ராஸ் ஹைகோர்ட் ஆகியவற்றின் அதிகாரம் விஸ்தரிக்கப்படுகிறது. அதுதான் இப்போது கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்தச் சட்டத்தின் ஷரத்தாகும். ஆனால் அதிலே மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால், ஸ்மால் காசஸ் கோர்ட், சிட்டி சிவில் கோர்ட் மற்றும் ஹைகோர்ட், ஆகியவற்றின் வேலைபளு அதிகமாகிறது. நீதிபதிகள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும். நீதிமன்றக் கட்டிடங்கள் புதிதாகக் கட்டப்பட வேண்டும். ஊழியர்கள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால் இதில் வருந்தத்தக்க ஒரு விஷயத்தை நான் சொல்லவிரும்புகிறேன். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமே தவிர இது அமுல் நடத்தப்படுவதில் பல தேக்கங்கள் ஏற்படுவதற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. உதாரணமாக சென்னை உயர்நீதிமன்றத்திலே இன்னும் 25 நீதிபதிகள் தேவைப்படலாம் என்று உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியே திருச்சியில் கருத்து தெரிவித்து இருக்கிறார்கள் என்று பத்திரிகையில் செய்தி வந்து இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் ஜூரிஸ்டிக்ஷன் தமிழகம் பூராவும் இருக்கிறது. சைதாப்பேட்டை மட்டுமல்ல. எனவே அதோடு தொடர்புடையது மட்டும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, சைதாப்பேட்டை வட்டத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் அந்த ஜூரிஸ்டிக்ஷன் விரிவுபடுத்தப்படுகிறது என்பது இந்தச் சட்டத்தின் நோக்கம். இப்போது சென்னை உயர்நீதிமன்றத்தில் 25 நீதிபதிகள் தான் நியமிக்கப்பட்டிருந்தாலும் சிவில் ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் பிரச்சினை வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: தலைவரவர்களே, ஒரு மாநகரின் எல்லை விரிவாக்கப்படும்போது, எந்த எந்த பகுதிகள் என்று புதிதாகச் சேர்க்கப்படும்போது. ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் அந்தப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதுபற்றி ஏதாவது கூறுவதாக இருந்தால் கூறலாம்.

திரு அ. ரகுமான்கான்: சென்னை உயர்நீதி மன்றத்தின் சிவில் ஒரிஜினல் ஜூரிஸ்டிக்ஷன் என்று சொல்லக்கூடிய அதிகாரம் இப்போது சைதாப்பேட்டை வட்டத்தோடு இணைக்கப்பட்ட பல பகுதிகளுக்கும் நீட்டிக்கப்படுகிறது. இந்தச் சட்டத்தில் அதைப் பற்றித்தான் சொல்கிறார்கள். நான் சொல்ல விரும்புவது, இதன் மூலம் ஸ்மால் காஸ் கோர்ட்ஸ், சிட்டி சிவில் கோர்ட்ஸ், மெட்ராஸ் ஹைகோர்ட் ஆகியவைகளுக்கு கூடுதலாகப் நீதிபதிகள் நியமிக்கப்பட வேண்டும். ஒர்க் லோடு அதிகமானதால் ஸ்டாஃப் கூடுதலாகப் போட வேண்டும். இந்தச் சட்டம் கொண்டு வரப் படுகிற நோக்கத்தைப்பற்றி நான் குறைசொல்லவில்லை. ஆனால் நீதிமன்றங்களிலே சட்டத்தை அமுல்படுத்துவதிலே ஏற்படுகின்ற இடையூறு என்ன என்பதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதையெல்லாம் இந்தச் சட்டம் விவாதத்திற்கு வரும் போது சொல்லுங்கள்; இப்போது தேவையில்லை.

திரு அ. ரகுமான்கான்: நான் ஒரு நிமிடம் சொல்வதை தயவு செய்து கேட்டுவிட்டு, நீங்கள் தீர்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவரவர்களே, These are all points that can be taken up at the time of consideration, but not at the time of introduction.

திரு அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, இங்கே இந்த சட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்ற நிலையிலேயே நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும். மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே போதிய அளவுக்கு நீதிபதிகள் இல்லை. முன்சிப் செலக்ஷன் ஆகி 7 வருடம் ஆயிற்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை; உட்காருங்கள்,

பேரவை முன்னுள்ள கேள்வி:

''1983-ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை) நீட்டித்தல் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்ற பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேர[illegible]லைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம்